பக்கம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

IA 2/2024

in

அசல் வழக்கு எண்.288/2022

எ.ம.சா.– 1– கருப்புசாமி, த/பெ.காளியப்பன்

நாள். 29.01.2026

எ.ம.சா.– 1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த இடைநிலைமனுவில் மனுதாரர் நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இடைமனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து தெரியும். மனுவில் கண்ட சொத்துக்களை இந்த மனுதாரர் 2 ஆம் மனுதாரரான பிரதிவாதியிடம் இருந்து கிரையம் பெற்ற பிறகு தான் தாவா அசல் வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிருரை மற்றும் நிருபண வாக்குமூலத்தில் தாவா வழக்கும், அத்துடன் தாக்கல் செய்துள்ள உடன் ஜப்தி மனு, அம்மனுவில் கண்ட சொத்துக்கள் 2 ஆம் எதிர்மனுதாரர் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு இருந்ததாக சொல்வதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, சாட்சி மேலும் கூறுகிறார் மனுவில் கண்ட சொத்தை விற்றுவிட்டதாக எதிருரையில் சொல்லவில்லை. நான் பணம் கொடுத்த போது பிரதிவாதி என்னிடம் வீடும் 3 காலி இடங்களும் இருப்பதாகவும் சொன்னதான் பேரில் தான் பணம் கொடுத்தேன். வழக்கு தாக்கல் செய்யும் போது மேற்படி விபரங்களை சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்யும் போது சொத்து சம்பந்தமாக வில்லங்கள் சரிபார்த்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மனுவில் கண்ட சொத்தானது ஆதியில் இருந்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியும். ஆதியில் தாவா சொத்தானது சக்திகணேஷ் என்பவருக்கு 12.04.1993 ஆம் தேதிய வா.சா.ஆ.1 ஆவணமான கிரைய பத்திரம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தை பின்னிட்டு 10.11.1995 ஆம் தேதிய கிரைய பத்திரம் மூலமாக மொட்டையாண்டி என்பவருக்கு கிடைக்கப்பட்டு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு மொட்டையாண்டி அனுபவித்து வந்த சொத்தை அவரின் வாரிசுகள் 27.04.2011 அன்று மணிகண்டன் என்பவருக்கு பொது அதிகார பத்திரத்தின் படி அதிகாரம் வழங்கினார் என்றால் சரிதான். பின்னிட்டு மணிகண்டன் முகவர் என்ற அடிப்படையில் 21.01.2015 வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலமாக 2 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வேளாங்கண்ணிக்கு கிரையம் செய்து

கொடுத்தார் என்றால் சரிதான். பின்னிட்டு 19.11.2020 ஆம் தேதி 2 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வேளாங்கண்ணியும் இந்த மனுதாரரும் மனுவில் கண்ட சொத்தை பொறுத்து இந்த மனுதாரருக்கு ரூ.2,50,000/–க்கு கிரையம் பேசி மேற்படி கிரைய தொகையில் ரூ.1,80,000/– கிரைய முன்பணமாக பெற்றுக்கொண்டு இந்த மனுதாரரும் 2 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியும் ஒரு பதிவு செய்த கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் படி தான் 2 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடந்த 16.06.2022 ஆம் தேதிய வா.சா.ஆ.5 பாக்கி கிரைய தொகை ரூ.70,000/– பெற்றுக்கொண்டு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். இந்த மனுதாரர் கிரையம் வாங்கிய 16.06.2022 ஆம் தேதியன்று மனுவில் கண்ட சொத்தை சுவாதீனம் எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். மனுவில் கண்ட சொத்தை பொறுத்து மனுதாரர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து கொண்டார் என்றால் சரிதான். மேற்படி பட்டாவின் அடிப்படையில் மனு சொத்திற்கு மனுதாரர் தான் கிஸ்தி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். மனுவில் கண்ட சொத்து சம்பந்தமாக மனுதாரர் வங்கியில் கடன் பெறுவதற்காக சட்ட ஆலோசகரிடம் ஆலோசனை பெறுவதற்கு வில்லங்க சான்று எடுத்து பார்த்த போது தான் மனுவில் கண்ட சொத்தானது 24.04.2023 தேதி ஜப்தி செய்யப்பட்டுள்ள விபரம் மனுதாரருக்கு 27.12.2023 தேதி தான் தெரிய வந்தது என்றால் சரியல்ல, நான் 20.08.2021 ஆம் தேதியே இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன். மனுதாரர் 2 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடம் வாங்கிய கிரையம் சட்டப்படி செல்லத்தக்கது என்றாலும், அதை ஜப்தி செய்ய நான் கோர முடியாது என்றாலும் சரியல்ல. மனுதாரரின் கிரையத்தை மோசடி செய்யும் நோக்கில் நானும் 2 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியும் கூட்டு சதி செய்து தாவா புரோநோட்டை தயாரித்து வழக்கை தாக்கல் செய்து மனுதாரரின் சொத்தை ஜப்தி செய்ய சட்டபடி எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் சொல்லியுள்ளவாறு நாளது தேதி வரை மனு சொத்தின் சுவாதீனத்தில் 2 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இருந்தார் என்பதை நிருபிக்க எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக ஜப்தியாகியுள்ள சொத்து 2 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனுதாரருக்கு விற்றுவிட்டார் என்ற விபரம் தெரிந்தும் உண்மையை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this

contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.01.29 20:42:57 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.